பாதிப்பும் இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) யானைக்கவுனி பாலப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

முற்பகல் 11-45

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நைனா பாலம் என்றழைக்கப்படுகின்ற யானைக்கவுனி பாலம், இருப்புப் பாதைகளை அகலப்படுத்தவதற்காகவும், பாதைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காகவும் 27-12-2016 அன்று மூடப்பட்டது. அதன் பிறகு இந்த பாலத்தைக் குறித்து இதே அவையில் 2017 ஆம் ஆண்டு இரண்டு முறையும், 2018 ஆம் ஆண்டு ஒரு முறையும் கேள்வி எழுப்பியதன் வாயிலாக, கடந்த 28-2-2018 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 26 கோடியே 45 இலட்சம் ரூபாயை மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தார். இருந்தாலும், அந்தப் பாலம் மூடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இது 50 சதவிகிதம் மத்திய அரசு மற்றும் 50 சதவிகிதம் மாநில அரசின் பங்களிப்போடு நடைபெற வேண்டிய பாலப் பணியாகும். இன்றைக்கு தமிழக அரசும், மத்திய அரசும் இணைப்புப் பாலத்தைப்போல இணைந்து, இந்தப் பாலத்தை விரைவாகக் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் பாலத்திற்கு யானைக்கவுனி பாலம் என்று பெயர். கோயம்புத்தூரிலே ஒரு யானையைப் பாதுகாக்க இந்த அரசு என்னவெல்லாம் நடவடிக்கை எடுக்கிறதோ அதேபோல் இந்த யானைக்கவுனி பாலத்திற்கும் நடவடிக்கை எடுத்து உடனடியாகக் கட்டித் தந்து, இந்த மாநகரத்து மக்களையும் காப்பாற்ற வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைமுகம் தொகுதி, 9/6 என்று இரயில்வே துறையினரால் குறியீடு செய்யப்பட்ட இரயில்வே துறையைச் சார்ந்த இந்த யானைக்கவுனி பாலமானது மிகவும் பழமையான பாலம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அவசியமான பாலமும்கூட. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இரண்டு முறை இதுகுறித்து இங்கே பேசியிருக்கிறார்கள். இப்பாலத்தின் அடியில் பல்வேறு முக்கிய இரயில்வே வழித்தடங்கள் இருப்பதாலும், இரயில்வே துறையால் புதிய வழித்தடங்கள் அமைத்து உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், தற்போதுள்ள பழைய பாலத்தின் உறுதித் தன்மை மிகவும் அபாயகரமாக உள்ளதாலும், இரயில்வே துறை தற்போதுள்ள உறுதித் தன்மையில்லாத பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்ட முடிவெடுத்துள்ளது. இரயில்வே துறையானது மக்கள் பாதுகாப்பு கருதி, போக்குவரத்திற்கு இந்தப் பாலத்தை மூடியுள்ளது. தற்போது 50 மீட்டர் நீளமுள்ள இப்பாலத்திற்குப் பதிலாக, 62.54 கோடி ரூபாய் மதிப்பில் 150 மீட்டர் நீளமுள்ள பாலம் கட்ட இரயில்வே துறையினரால் திட்டமிடப்பட்டு, சென்னை மாநகராட்சியால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையால் அமைக்கப்படவுள்ள புதிய பாலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் அணுகு சாலைகள் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் மதிப்பீடு 30 கோடி ரூபாய் ஆகும். இந்தப் பாலத்தை இடித்துவிட்டு, புதிதாகப் பாலம் கட்டுவதற்காக இரயில்வே துறையால் ஒப்பந்தங்கள் விரைவில் கோரப்படவுள்ளன. இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இரயில்வே துறையால் பாலப் பணிகள் 50 சதவிகிதம் முடிவடையும் கட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியால் அணுகு சாலை அமைக்கும் பணி துவங்கப்படும். சாலைப் பணி முடிந்து, பாலப் பணி ஆரம்பிப்பதற்கு ஓராண்டுக் காலம் ஆகும். சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல் துறையினர் இதனால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, பல்வேறு வழித்தடங்களை மாற்றியமைத்து, கூடுதல் கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்து, பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலால் பாதிக்கப்படாதவண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவிலே புதிய பாலம் கட்ட மீண்டும் இரயில்வே துறைக்கு வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*